**CC.No**. 54/2025

**Date: 27.03.2026**

**ம.சா.** 1. **சோலச்சி, க/பெ. காளிதாஸ், பள்ளத்தூர்**

**(சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டது)**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1) காலம்சென்ற என் தகப்பனார் இராமசந்திரன் என்பவருக்கு நான் 3 வாரிசுகள் என்று சொல்வது தவறு என்றாலும் 4 வாரிசுகள் என்றால் சரியல்ல. இராமசந்திரன் என்பவரின் மனைவி பெயர் என்ன என்றால் வள்ளி. மேற்படி இராமசந்திரனின் வாரிசுகள் இன்னார் என்று சொல்வதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. எனது பெயர் சோலை பிரியா என்றால் சரியல்ல. எனது அதிகாரபூர்வ பெயர் சோலச்சி. என் அம்மா பெயர் வள்ளி. எனக்கும் காளிதாஸ் என்பவருக்கும் ஏற்பட்ட திருமண பந்தத்தின் விளைவாக 2 குழந்தைகள் என்றால் சரிதான். எனது மகனுக்கு கடந்த 07.12.2025 அன்று மதுரை கோச்சடை முத்தையா கோவிலில் காதணிவிழா நடைபெற்றது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பத்திரிக்கைதான் மேற்படி விழாவிற்கு அச்சடிக்கப்பட்டது என்றால் சரிதான். அதில் என் பெயர் சோலை பிரியா என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2) என்னிடம் காட்டப்படும் 12.11.2025 தேதியிட்ட ஒரு சிறப்பு அதிகாரப்பத்திரம் என் தகப்பனார் எனக்கு நான் இந்த வழக்கை நடத்துவதற்காக திரு.பத்மநாபன், நோட்டரி பப்ளிக் அவர்கள் முன்னிலையில் எழுதப்பட்டது என்றால் சரிதான். **மேற்படி**

**அதிகாரபத்திரம் எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி அதிகார பத்திரம் எனக்கு வழங்குவதற்கு இந்த நீதிமன்றத்தில் எந்த வித புகார் மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதற்கு முன்பே என் தகப்பனார் இந்த வழக்கை தாக்கல் செய்து விட்டார். இந்த அதிகார பத்திரம் என் தகப்பனார் நல்ல உடல்நிலையில் இருந்த போதுதான் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. அவர் உடல்நலம் பாதிக்கப்பட்டு நடக்க இயலாத சூழ்நிலையில் எழுதப்பட்டது. என் தகப்பனார் இந்த நீதிமன்றத்தில் எந்த சாட்சியும் அளிக்கவில்லை என்றால் சரிதான்.

3) என் தகப்பனாருக்கு மேற்படி அதிகார பத்திரம் எழுதிக்கொடுக்கும்போது அவரால் பேச முடியாது என்று நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான் அப்போது அவருக்கு தொண்டையில் புற்று நோய் இருந்தது. எனவே அவரால் தொடர்ந்து 2 நிமிடம் கூட பேசமுடியாது என்றால் சரிதான். மேற்படி அதிகாரபத்திரமும், வழக்கின் புகார் மனுவும் என் தகப்பனரால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி புகார் மனுவிலும், அதிகாரபத்திரத்திலும் என் தகப்பனார் கையொப்பம் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி அதிகார பத்திரத்தில் கையொப்பம் செய்த போது அவர் சுயநினைவில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி எ.ம.சா.ஆ.1 ல் சொல்லப்பட்ட வாசகங்களும் அவர் சொல்லி தட்டச்சு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி எ.ம.சா.ஆ.1 என்னால் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி அதிகார பத்திரத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு என் தகப்பனார் எனக்கு

அதிகாரம் கொடுத்ததாக எந்த வாசகமும் இடம்பெறவில்லை என்றால் சரியல்ல. எனவே மேற்படி அதிகார பத்திரத்தை நானே என் போக்கிற்கு தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி அதிகாரபத்திரத்தில் மேற்படி வழக்கின் காசோலை குறித்து வழக்கு தாக்கல் செய்ய எனக்கு அதிகாரம் உள்ளது என்றும், வழக்கறிஞரை நியமிக்கவும் எனக்கு அதிகாரம் உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4) எ.ம.சா.ஆ.1 ஆவணத்தில் 16.10.2023 அன்று பணபரிவர்த்தனை ரூ. 7 லட்சத்து 20 ஆயிரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் மனுவும் அதிகார பத்திரமும் என் தகப்பனாரின் ஒப்புதல் இன்றிதான் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. உண்மையில் என் தகப்பனார் எ.ம.சா.ஆ.1 ஐ தயார் செய்திருந்தால் அவர் சரியான தேதி மற்றும் சங்கதிகளை குறிப்பிட்டிருப்பார் என்றால் சரியல்ல. எதிரி வசந்த சேகரனுக்கு ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் குழந்தை என்றால் சரிதான். அவர் மதுரை கோச்சடையில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். அவரது மகன் பெயர் காளிதாஸ் மகள் பெயர் நாகலெட்சுமி என்றால் சரிதான். அவரது மகன் காளிதாஸ் மதுரையில் இருந்த காரைக்குடிக்கு வந்து கடந்த 2010 ம் ஆண்டு CCUBE டெக்னாலஜி என்ற கம்யூட்டர் கடையை ஆரம்பித்தார் என்றால் சரிதான். எனக்கும் மேற்படி கம்யூட்டர் சென்டருக்கும் என்ன தொடர்பு என்றால் எனக்கும் அந்த கம்யூட்டர் சென்டருக்கும் எந்த தொடர்பும் இல்லை. நான் மேற்படி என் கணவர் CCUBE டெக்னாலஜி கம்யூட்டர் நிறுவனத்தில் வேலை பார்க்கும்போதுதான் எனக்கும் என் கணவருக்கும் இடையே காதல் ஏற்பட்டு

திருமணம் செய்து கொண்டோம் என்றால் சரியல்ல.

5) நான் கானாடுகாத்தான் மருத்துவமனையில் வேலை பார்க்கும்போது எனக்கு என்ன பணி நேரம் என்றால் காலை 7 முதல் 1 அல்லது மதியம் 12 முதல் இரவு 7 மணிவரை. முதல் பிரசவம் என் தாயார் வீட்டில் நடைபெற்றது என்றால் சரிதான். இரண்டாவது குழந்தை என் மாமனார் வீட்டில் பிரசவம் பார்த்தார்கள் என்றால் சரியல்ல. 2 வது குழந்தை எப்போது பிறந்தது என்றால் 16.12.2023 ல் பிறந்தது. மேற்படி குழந்தை மதுரை இராஜாஜி மருத்துவமனையில் பிறந்து என்றால் சரிதான். குழந்தை பிறப்பதற்கு சுமார் 20 நாட்களுக்கு முன்னர் நான் மீனாட்சி மிசன் மருத்துவமனையில் சிகிச்சையில் சுமார் 1 வாரம் உள்நோயாளியாக இருந்தேன் என்றால் சரியல்ல. நான் செக்கப்பிற்காக மட்டும் சென்றேன். நான் மேற்படி மருத்துவமனையில் பிரசவத்திற்காக சேர்ந்து அதிக பணம் செலவு செய்த பின்னர் நான் அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரியல்ல. எனக்கு இதயத்தில் நோய் இருந்ததால் என்னை மதுரை மீனாட்சி மிசன் மருத்துவமனையில் பரிசோதனைக்கு சென்று பின்னர் நான் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். நான் பரிசோதனை மட்டும் செய்யாமல் மேற்படி மருத்துமனையில் பிரசவம் முடித்துதான் வந்தேன் என்றால் சரியல்ல. நான் மேற்படி மருத்துவமனையில் இருந்தபோது ரூ. 2 -3 லட்சம் எதிரி தரப்பில் செலவு செய்தார்கள் என்றால் சரியல்ல.

6) எதிரியின் மகள் நாகலெட்சுமி என்பவருக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 19.11.2023 ல் திருமணம் நடைபெற்றது. மேற்படி திருமணத்திற்கு முன்னர்

நிச்சயதார்த்தம் மதுரை கோச்சடையான் கோவிலில் நடைபெற்றது என்றால் சரிதான். மேற்படி நிச்சயதார்த்தத்தில் நானும் என் அப்பா, அம்மாவும் கலந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். நான் கர்பமாக இருந்ததால் கோவிலுக்கு செல்லவில்லை. மேற்படி எனது நாத்தனார் திருமணத்திற்கு என் தாய் தந்தையரை அழைக்கவில்லை என்றால் போன் மூலம் தகவல் சொன்னார்கள். என் மாமனார் எதுவரை படித்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. ம.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணத்தில் உள்ளது எதிரியுடைய கையெழுத்து இல்லை என்றால் சரியல்ல. வழக்கு விபரத்தை என் அப்பா மதுரை சென்று வழக்கறிஞருக்கு சொன்னார் என்றால் சரிதான். வழக்கு விபரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என் அப்பா வழக்கறிருக்கு கொடுத்த விபரத்திற்கும், அதிகாரபத்திரத்தில் உள்ள விபரமும் எனக்கு தெரியும் என்றால் தெரியும். ம.சா.ஆ 5 ற்கும், எ.ம.சா.ஆ.1 ற்கும் உள்ள சங்கதிகள் எதுவும் என் தகப்பனார் சொல்லவில்லை நானாக தயார் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல.

7) எனது 2 வது குழந்தை பிறப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு நான் என் மாமனார் வீட்டில்தான் இருந்தேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.6 ஆவணம் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. திருப்பி அனுப்பப்பட்ட அஞ்சலக உறையுடன் கூடிய வழக்கறிஞர் அறிவிப்பை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ. 6 ல் எந்த வித அஞ்சலக முத்திரையும் கிடையாது என்றால் சரிதான். நான் விசாலம் சிட்பன்ட்டில் கணக்கு முடித்துதான் பெறப்பட்ட தொகையை எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படுவதற்கு ஆவணம் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை

என்றால் சரியல்ல கொடுத்துள்ளேன். அதற்கான புத்தகத்தை நான் தாக்கல் செய்துள்ளேன்.

ம.சா.ஆ.12 ஆவணத்தின் கணக்கு எண் என்னவென்றால் KLJ 5/15 ஆகும்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.27 16:52:20 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.( மு.கூ.பொ)